*Chapter XXII Code of Criminal Procedure.)*

*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC.158/2020***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-4 (LW-6)***

*Name / Father's Name:* ***திரு.அண்ணாமலை த/பெ. ஆண்டி***

*Village/ Taluk:*

*Caste, Religion:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **18.09.2024.**

துவக்க நேரம் 02.59

**அரசு தரப்பு வழக்கறிஞர் இல்லை என்றாலும் போலீஸ் பொறுப்பதிகாரியான திரு.மாயவன் அவர்கள் ஆஜராகியுள்ளார். அவர் முன்னிலையில் சாட்சி அடையாளம் காட்டப்பட்டு விசாரணை**

**முதல் விசாரணை**

நான் தற்போது பெத்தநாய்க்கன்பாளையத்தில் உள்ள சூலாங்குறிச்சியில் குடியிருந்து வருகிறேன். கடந்த 26.11.2019ம் தேதி காலை சுமார் 10.00-10.30 மணியளவில் கருமந்துறைக்கு செல்ல வேண்டி பகுடுப்பட்டு பஞ்சாயத்து மோட்டார் அருகே நானும், கனகராஜ் என்பவரும் சென்றுகொண்டிருந்த போது அங்கே வந்த கருமந்துறை போலிசார் விபத்து நடந்தது சம்பந்தமாக விசாரித்து மாதிரி வரைபடம் வரைந்தார்கள். நேரில் வந்த விசாரணை செய்ததற்கு சாட்சியாக என்னிடமும், கனகராஜ் என்பவரிடமும் கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள 2-வது கையெழுத்து என்னுடையது தான். **(பார்வை மகஜரிலுள்ள 2வது கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார், என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

நான் கையெழுத்து செய்ததாக சொல்லும் சம்பவயிடத்தின் அருகே வேறு குடியிருப்புகள் உள்ளது என்றால் சரிதான். நான் கையெழுத்து செய்த பேப்பரில் என்ன எழுதி இருந்தது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. போலீசார் கேட்டுக் கொண்டதால் கையெழுத்து செய்தேன். நான் காவல் நிலையத்தில் வைத்து எழுதாத வெள்ளை தாளில் கையெழுத்து செய்துவிட்டு தற்போது சம்பவ இடத்தில் வைத்து கையெழுத்து செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

முடிவு நேரம் 03.07

ஒம்/-S.அருண்குமார்,
நீதித்துறை நடுவர் எண்.2,
ஆத்தூர்.